Koviloor Digital Library

4-5

ஸ்ரீ ஜகத்குரு

ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகள்

சரித்திரம்

கோவிலூர் ஆதீனம்
(1100)
மடாதிபதி
கோவிலூர் மடாலயம்
A·No: 1100
Q1: 332 ப

R. கிருஷ்ணஸ்வாமி அய்யர்.

Koviloor Digital Library

மஹான்கள் சரித்திரங்கள்

गुरुवंशकाव्यम् I १–७ सर्गाः	1–8–0
श्रीशंकरभगवत्पादाष्टोत्तरशतनामस्तोत्रम्	0–2–0
गुरुत्रयाष्टोत्तरशतनामस्तोत्रम्	0–4–0
Life of His Holiness Sri Sacchidananda Siva Abhinava Narasimha Bharati Swamigal, Jagadguru of Sringeri	1–8–0
The Greatness of Sringeri	0–8–0
ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யார் சரித்திரம்	1–0–0
ஸ்ரீ ஜகத்குரு சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகள் சரித்திரம்	0–8–0
,, ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீஸ்வாமிகள் சரித்திரம்	[In the Press
,, நரஸிம்ஹ பாரதீஸ்வாமிகள் சரித்திரம்	[In the Press
ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள் சரித்திரம்	1–0–0
ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகள் சரித்திரம்	0–2–0

Koviloor Digital Library

4-5 284

உ

ஸ்ரீ ஜகத்குரு
ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகளவர்கள்
சரித்திரம்

R. கிருஷ்ணஸ்வாமி அய்யர்
இயற்றியது

கோவிலூர் ஆதீனம்
1100
அ:332 ல
...-630 307

1951
ஸ்ரீரங்கம்
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்ஸில்
அச்சிடப்பட்டது

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-5

அட்டவணை

பக்கம்

आचार्यचरित्रसंग्रहः । १

पञ्चरत्नस्तुतिः । २

1. பால்யம் 1

2. பீடாரோஹணம் 4

3. கும்பாபிஷேகம் 6

4. தக்ஷிணதேச யாத்திரை 9

5. சில லீலைகள் 15

6. அதீத நிலை 27

7. காலடி விஜயம் 33

8. உபதேச முறை 35

9. சில உபதேசங்கள் 38

Koviloor Digital Library

படங்களின் விவரம்

பக்கம்

1. ஸ்ரீ ஜகத்குரு சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகள். (1951)

2. ஸ்ரீ சாரதாம்பாள், சிருங்கேரி.

3. ஸ்ரீ ஜகத்குரு சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகள் (1923)

4. ,, ஸச்சிதாநந்தசிவ அபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் 8

5. ,, ,, 9

6. ஸ்ரீ சங்கர மடம், பங்களூர் 16

7. ஸ்ரீ ஜகத்குரு சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகள் (1912) 17

8. ,, ,, (1916) 24

9. ,, ,, (1925) 25

10. ,, ,, (1926) 32

11. ,, ,, (1927) 33

12. மைஸூர் மஹாராஜா நால்வடி ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் 40

13. ஸ்ரீ ஜகத்குரு அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள் (1931) 41

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ ஜகத்குரு
ஸ்ரீ சந்த்ரசேகர பாரதீஸ்வாமிகள்

Koviloor Digital Library

॥ श्रीगुरुभ्यो नमः ॥

॥ आचार्यचरित्रसंग्रहः ॥

श्रीशृङ्गाद्रौ मुनिवरगणैः सादरं सेव्यमाने
देशे रम्ये परमगुरुराट्पादधूलीपवित्रे ।
जज्ञे वंशे विमलयशसामाश्वयुक्कृष्णपक्षे
एकादश्यां दिनपतिदिने देशिको नन्दनाब्दे ॥१॥

बालोऽप्येष प्रथितविनयो नारसिंहाभिधानः
शास्त्राभ्यासे कुतुकहृदयोऽनन्यलभ्यैर्गुणौघैः ।
नानाजन्मप्रचितसुकृतात् प्रीणयन् देशिकेन्द्रं
सद्यस्तस्यापरिमितकृपापाङ्गपात्रं बभूव ॥ २ ॥

नैजे धाम्नि स्थितवति परीधाविचैत्रे यतीन्द्रे
भक्त्या एनं विधिवदनघं प्राप्तसंन्यासयोगम् ।
विद्यापीठे भुवनमहिते चाभ्यषिञ्चन् प्रमोदात्
तत्रासीनोऽखिलगुरुपदे राजते चन्द्रचूडः ॥ ३ ॥

Koviloor Digital Library

*छायां मत्कां रचय नमनध्यानपूजासु योग्या-
मित्याचार्यैरसकृदुदितां सत्यवाचं चिकीर्षुः ।
तत्तादात्म्यं स्ववपुषि वहन् मन्दिरे मूर्तिमन्यां
पीयूषाश्मन्यपि च शुभदां स्थापयामास भक्त्या ॥

आत्मारामो विषयविमुखोऽप्यर्थितः शिष्यवर्गै-
र्दृष्ट्वा धर्म्ये पथि शिथिलतां प्रायशश्चाग्रजानाम् ।
आ शृङ्गाद्रेः श्रममगणयन्ना च कन्याकुमार्या
लोकक्षेमं मनसि कलयन् जैत्रयात्रामकार्षीत् ॥४॥

तिष्ये धर्माचरणमधुना तीव्रयत्नेन साध्यं
यत्ने विघ्नो भवति बहुशः कालदेशानुगुण्यात् ।
यावद्युष्मान् ग्रसति न कलिस्तावता नैजतत्त्वं
बोद्धुं यत्नं कुरुत सहसेत्यादिशत् पादनम्रान् ॥

---

*तिष्ठाम्यत्रैव मातस्तव पदयुगलं वीक्षमाणः प्रमोदा-
न्नाहं त्यक्त्वा तवाङ्घ्रिं सकलसुखकरं क्वापि गच्छामि नूनम् ।
छायां मत्कां विधत्स्व प्रवचननमनध्यानपूजासु शक्तां
शुद्धामेकां त्रिलोकीजननपटुविधिप्राणकान्ते नमस्ते ॥

भक्तिसुधातरङ्गिणी—पुटं 159

Koviloor Digital Library

ब्रह्मात्मैक्ये निगमवचसामन्वयं बोधयन्ती-
व्याचक्षाणोऽतिसरलपदैः शांकरीर्भाष्यपङ्क्तीः ।
पूजासक्तः किल परिहरन् लोकवार्ता वृथार्थाः
प्रत्यङ्निष्ठः सुखमनुभवन् राजते योगिराजः ॥६॥

——: o :——

॥ पञ्चरत्नस्तुतिः ॥

श्रीमच्छङ्करदेशिकेन्द्रकलिते व्याख्यानसिंहासने
श्रीमद्वार्तिककारमुख्यमुनिभिः सर्वज्ञकल्पैः पुरा ।
अध्यूढे विमलेऽभिषिक्तमधुना सत्यात्मनिष्ठापरं
वन्दे देशिकसार्वभौममनिशं श्रीचन्द्रचूडाह्वयम् ॥ १ ॥

नानादेशसमागतान् पदनतान् छात्रान् विभिन्नाशया-
नाधिव्याधिविचित्रतापविवशान् स्वास्थ्यं निनीषुर्मुनिः ।
तत्तत्काङ्क्षितपूरणाय वरदां संप्रार्थयन्नम्बिकां
यो लोकत्रयदेशिको विजयते सेवे तदङ्घ्रिद्वयम् ॥ २ ॥

मिथ्याज्ञानविजृम्भितं भवसुखं संत्यज्य नित्यं सुखं
प्राप्तुं स्वीयपदाम्बुजं श्रितवतो भक्तस्य पुण्यात्मनः ।

Koviloor Digital Library

ब्रह्मात्मैक्यविबोधकश्रुतिवचःपीयूषसंदायिनं
वन्दे ब्रह्मविदुत्तमं प्रतिदिनं श्रीशृङ्गशैलाधिपम् ॥ ३ ॥

शान्ताजानिपदाम्बुजातकणिकासंपर्कसंपाविते
श्रीशृङ्गाचलसानुमध्यविलसत्तुङ्गापगातीरगे ।
नानापादपशोभितेऽतिमधुरं कूजद्विहङ्गावृते
देशे चित्तविशोधके गुरुवरं सेवे कदा वा पुनः ॥ ४ ॥

संसाराम्बुधिलङ्घने कृतधियो यत्पादपङ्केरुहं
भक्तक्षेमधुरंधरं भवहरं नौकायमानं विदुः ।
तस्यैतस्य नृपालसेवितपदस्याचार्यचूडामणेः
संमान्यौ चरणावनन्यशरणः शीर्षे निदध्यां कदा ॥ ५ ॥

Koviloor Digital Library

ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பா

Koviloor Digital Library

ஸ்ரீ ஜகத்குரு
ஸ்ரீ சந்த்ரசேகரபாரதீஸ்வாமிகள்
1923

Koviloor Digital Library

श्रीगुरुभ्यो नमः ॥

ஸ்ரீ ஜகத்குரு

ஸ்ரீ சந்திர சேகர பாரதீ ஸ்வாமிகளவர்கள் சரித்திரம்

1. பால்யம்

ஸ்ரீ சிருங்ககிரி க்ஷேத்திரத்தில் ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யாரவர்களால் ஏற்படுத்தியிருக்கும் தக்ஷிணாம்நாய வியாக்யாக ஸிம்ஹாஸநத்தில் தத்காலம் அமர்ந்து ஸ்ரீ ஜகத்குரு பீடாதிபத்யத்தை வஹித்து விளங்கி வருகிற ஸ்ரீ சந்திர சேகர பாரதீ ஸ்வாமிகளவர்கள் நந்தன வருஷம ஆச்வயுஜ மாஸம் கிருஷ்ண ஏகாதசியும் மகாநக்ஷத்திரமும் கூடிய ஞாயற்றுக்கிழமை (1892 அக்டோபர் 16) காலையில் அவதரித்தார்கள். அவர்களுக்கு ஜந்மபூமியே சிருங்ககிரி தான். அவர்கள் தகப்பனுர் கோபால சாஸ்திரிகள். தாயார் லக்ஷ்மியம்மாள். பிதாமஹரான ஸுப்பா சாஸ்திரிகள் பால்யத்திலேயே நன்கு வித்யாப்யாஸம் செய்து விரக்தராக ஹிமாசலப் ராந்த்யம் புறப்பட்டுப் போயிருந்ததாகவும் அவரை அக்காலம் பீடாதிபத்யம் வஹித்துவந்த ஸ்ரீநரஸிம்ஹ

Koviloor Digital Library

பாரதி ஸ்வாமிகள் திருப்பி வரவழைத்து விசேஷமாக அநுக்ரஹித்து ஸ்ரீமடத்திலேயே ஆஸ்தான வித்வானாக வைத்துக்கொண்டதாகவும் தெரிகிறது.

அவருடைய ஒரே புத்திரரான கோபால சாஸ்திரிகளும் நல்ல பாண்டித்தியத்துடன் விளங்கிக் கொண்டு கிருஹஸ்ததர்மத்தை யனுஷ்டித்து வருகையில் பதிநான்கு குழந்தைகள் ஜனித்ததில்தெய்வகதியால் பதிமூன்று குழந்தைகள் தவறி, ஆசார்ய பீடத்திற்கேற்பட விருக்கும் நரஸிம்ஹன் என்கிற இந்த புத்திரன் மாத்திரம் ஆயுர்யோகத்துடனிருந்தான். ஏதோ பாபத்தினால் தனக்கு குழந்தைகள் தக்கவில்லையென்று உணர்ந்த பெற்றோர்கள் இக் குழந்தையாவது ஜீவித்திருக்கவேண்டுமானால் தங்களைவிட்டுப் பிரிந்திருப்பதே நலமென்று நினைத்து அப்பொழுது ஸ்ரீமடம் ஸர்வாதிகாரியாயிருந்த ஸ்ரீகண்ட சாஸ்திரிகளிடம் தெரிவித்ததின் பேரில், அவர் இப்பையனைத் தன் ஸம்ரக்ஷணையிலேயே வைத்துக்கொண்டு அநேகமாய் தன்வீட்டிலேயே இருக்கும்படி செய்தார். சிருங்கேரியில் கன்னடமும் இங்கிலீஷும் கற்றுக்கொடுக்கிற பள்ளிக்கூடத்தில் இப்பாலகரைச்சேர்த்துவிட்டதில் தன்னுடைய புத்தி சக்தியினாலும் நன்னடத்தையினாலும் உபாத்யாயர்களுக்கு விசேஷ அபிமான பாத்திரமாக இருந்து வந்தார்.

Koviloor Digital Library

பூர்வ ஜன்ம புண்யத்தினுல் இவருடைய பன்னிரண்டாவது வயதில் பூர்வாசார்யாரான ஸ்ரீ ஸச்சிதானந்தசிவாபிநவந்ருஸிம்ஹபாரதீஸ்வாமிகளவர்களுடைய கடாக்ஷம் ஏற்பட்டது. இப்பாலகருடைய யோக்கியதையையும் பின் அடையக்கூடிய உன்னத ஸ்தானத்தையும் நன்கு உணர்ந்தபடியால் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டு ஸ்ரீ மடத்தைச்சேர்ந்த ஸத்வித்யா ஸஞ்ஜீவினீ பாடசாலையில் சேரும்படி செய்தார்கள். பின்னுல் இவருடைய ஸ்வச்சமான புத்தியைப்பற்றிப் பல விதத்தில் தெரிந்துகொண்டு தர்க்க சாஸ்திரத்தில் விசேஷப் பயிற்சி யேற்படும்படி வேண்டிய ஏற்பாடு செய்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் காலடியில் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யார் ஆலயப் பிரதிஷ்டை செய்து திரும்பி வரும் வழியில் பங்களூரில் பாரதீய கீர்வாண ப்ரௌட வித்யா வர்த்தினீ என்ற பாடசாலை ஏற்படுத்தினுர்கள். அப்படியே சிருங்கேரிக்கு வந்துசேர்ந்ததும் நரஸிம்ஹ சாஸ்திரிகளுடைய சாந்த ஸ்வபாவத்தையும், வித்யையைக்ரஹிப்பதில் உள்ள ஆர்வத்தையும், நித்ய கர்மாநுஷ்டானத்தில் உள்ள சிரத்தையையும், குருவிடமும் தேவதையிடமும் உள்ள விசேஷமான பக்தியையும் நேரிற் கண்டு ஸந்தோஷமடைந்து,

संसारनामकसरिन्नाथोत्तरणे तवास्ति यदि वाञ्छा ।
बालक शृणु मद्वचनं श्रुतिमस्तकसंमतं हितोदर्कम् ॥

Koviloor Digital Library

प्रविधाय सशिखवपनं छित्वा यज्ञार्थमाहृतं सूत्रम् ।
स्वीकृतपारमहंस्यः स्थिरतरसाधनचतुष्टयोपेतः ॥

श्रद्धाभक्तियुतात्मा प्रविचारय तत्त्वमात्मनः सुचिरम् ।
सद्गुरुमुखाम्बुजातस्रवदागमशीर्षवाक्यपीयूषैः ॥

என்ற மூன்று சுலோகங்களால் விசேஷமாக அநுக்ரஹித்து வேதாந்த சாஸ்திரத்திற்கு மிகவும் உபயோகமான பூர்வமீமாம்ஸா சாஸ்திரம் கற்றுக்கொள்வதற்காக அந்த பங்களூர் பாடசாலைக்கே நரஸிம்ஹ சாஸ்திரிகளை அனுப்பி வேண்டிய ஸௌகர்யங்களைச் செய்துகொடுத்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் இவர்களுக்கு ஸர்வ சாஸ்திரங்களிலும் பாண்டித்யம் ஏற்படுத்த வேண்டுமென்று ஸ்ரீ சாரதாம்பாளின் ஸன்னிதியில்

सर्वज्ञं श्रीनृसिंहं कुरु शिवदयिते सत्वरं मद्विनम्रम् ॥

என்று நான்கு சுலோகங்களால் பிரார்த்தித்திருப்பதினாலும் மற்றும் பல காரணங்களாலும் தனக்குப் பின் இவர்களையே பீடத்தில் நியமனம் செய்வார்களென்று தோன்றும்படியிருந்தது.

2. பீடாரோஹணம்

ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் 1911ல் சிருங்கேரிக்குத்திரும்பிவந்து கொஞ்சநாளைக்குள் தன்

Koviloor Digital Library

அவதார பிரயோஜனம் பூர்த்தியாய் விட்டபடியால் விதேஹகைவல்யத்தை யடையவேண்டுமென்று தீர்மானித்துத் தனக்குப்பின் பீடாதிபத்யத்திற்கு நரஸிம்ஹ சாஸ்திரிகளை அழைத்துவரும்படி தன் அத்யந்த சிஷ்யரான கிருஷ்ண சாஸ்திரிகள் என்ற குனிகல் ராம சாஸ்திரிகளை பங்களூருக்கு அனுப்பினார்கள். அப்படியே தன் உத்தேசத்தை மைஸூர் மஹாராஜா அவர்களுக்கும் தெரிவிக்கும்படி சொல்லியனுப்பினார். அவ்விதமே அவர் பங்களூர்போய் மஹாராஜாவிடம் தெரிவித்துவிட்டு நரஸிம்ஹ சாஸ்திரிகள் ஜாகைக்கு வந்து அவர் பெற்றோர்களிடத்தில் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களின் ஆக்ஞையை தெரியப்படுத்தியதில் தகப்பனார் அதை மனதுடன் ஸம்மதித்தார். தாயார் மாத்திரம் தனக்கு பதினான்கு குழந்தைகள் பிறந்தும் இவர் மாத்திரம் மீதமிருக்க இவரையும் விட்டுப் பிரியவாவென்று கண்டிப்பாய் மறுத்துவிட்டாள். அதன்பேரில் நரஸிம்ஹ சாஸ்திரிகளே தன் தாயாரிடம், அவள் எதிர்பார்க்கிறபடி தான் ஒருநாளும் கிருஹஸ்தனாயிருந்து குடித்தனம் செய்கிற உத்தேசம் தனக்கு கொஞ்சமேனும் இல்லையென்றும், சிருங்கேரியில் இருந்து வந்தால் தன்னுடைய யோக க்ஷேமத்தைப் பற்றி அடிக்கடி தெரிந்துகொள்ளவும், ஸமயங்களில் நேரில் பார்த்துக்கொள்ளவும் ஸௌகர்யமிருக்குமென்றும், மற்ற ஸன்யாஸிகள்

Koviloor Digital Library

மாதிரி ஸஞ்சாரம் செய்துகொண்டிருந்தால் இவ்வித ஸௌகர்யம் ஏற்படாதென்றும், ஆகையால் ஆசார்யாரவர்களுடைய ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டு நடப்பதுதான் அவளுக்கும் ஹிதமென்றும், வெகுவாக எடுத்துச் சொன்னதின்பேரில் தாயார் ஸம்மதித்தாள். பிறகு நரஸிம்ஹ சாஸ்திரிகளை அழைத்துக்கொண்டு ராம சாஸ்திரிகள் சிருங்கேரிக்குப் புறப்பட்டார். ஆனல் அவர்கள் சிருங்கேரிக்கு வந்து சேருவதற்கு முந்தின நாளே அதாவது பரீதாவி சைத்திர சுத்த துவிதீயை (1912 மார்ச்சு 12) தினம் ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் விதேஹ கைவல்யமடைந்து விட்டார்கள். மேல் செய்யவேண்டிய காரியங்கள் எல்லாம் முடிந்த பிற்பாடு சைத்திர கிருஷ்ண ஷஷ்டி (1912 ஏப்ரல் 7) யில் நரஸிம்ஹ சாஸ்திரிகளுக்கு விதிவத்தாக ஸன்யாஸம் கொடுத்து ஸ்ரீ சந்த்ரசேகர பாரதீ என்கிற யோகபட்டத்துடன் மறுநாள் ஸ்ரீ சிருங்கேரி வியாக்யான ஸிம்ஹாஸனத்தில் அதிவிமர்சையாக பட்டாபிஷேகம் நடந்தது.

3. கும்பாபிஷேகம்

இவ்விதம் புதிதாக பட்டத்திற்கு வந்த ஸ்ரீமத் ஆசார்யாருக்கு பூர்வாசார்யாரவர்களுடைய அனுக்ரஹம் பூர்ணமாயிருக்கிறதென்று உணர்த்தும் கூட

Koviloor Digital Library

இன்னும் கொஞ்சநாள் அவர்கள் இருந்து தனக்கு வழிகாட்டியாக இல்லாமல் போய்விட்டதை உத்தேசித்து மிகவும் துக்கப்பட்டார்கள். தன் ஆசார்யாளுடைய வழியிலேயே தானும் செல்லவேண்டுமென்றும், தன்னை அப்பீடத்தில் அமர்த்தியதற்குத் தக்கவாறு யோக்கியதையை ஸம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்றும் அவா மிகவும் மேலிட்டிருந்தது. அதிப்பிரஸித்தரான வித்வானும் ஸதாசார ஸம்பன்னரும் உபசாந்தி ஸ்வரூபராயும் இருந்து பின்னால் கூடலி மடம் ஆசார்யாராக ஏற்பட்டவருமான மஹா மஹோபாத்யாய வித்யாநிதி விருபாக்ஷ சாஸ்திரிகளவர்களிடம் மூன்று வருஷங்களுக்குள் வேதாந்த சாஸ்திரத்தை அப்யஸித்தார்கள். இதர சாஸ்திரங்களிலும் விசேஷமான பாண்டித்யம் ஏற்பட்டது. அவர்கள் அப்யஸித்த காலத்தையும் அவர்கள் அடைந்த வித்யா வைபவத்தையும் கவனிக்கும்போது பூர்வாசார்யாரவர்களுடையவும் ஸ்ரீ சாரதாம்பாளுடையவும் பரிபூர்ணமான அனுக்ரஹம் பெற்றவர்கள் என்றே சொல்லவேண்டும்.

பூர்வாசார்யாரால் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியாகாமலிருந்த ஸ்ரீ சாரதாம்பாள் தேவாலயத்தை பூர்த்திசெய்ய வேண்டுமென்றும் தன் ஆசார்யாருடைய ஸமாதிஸ்தலத்தில் ஓர் அழகான ஆலயம் கட்டவேண்டுமென்றும் தீர்மானித்து அதற்கு

Koviloor Digital Library

வேண்டிய ஏற்பாடுகள் செய்து வந்தார்கள். இவ்வாலயங்கள் கட்டிமுடிக்க மூன்று வருஷங்கள் ஆயின. 1916ல் இரண்டு ஆலயங்களிலும் கும்பாபிஷேகம் அதி விமர்சையாக நடந்தது. அந்த ஸமயம் மைஸூர் மஹாராஜா கிருஷ்ணராஜ உடையாரவர்கள் நேரில் வந்திருந்தார்கள். பரோடா, ஜெய்க்வார் முதலான மத்திய இந்திய மஹாராஜாக்கள் தங்கள் பிரதிநிதிகளை காணிக்கைகளுடன் அனுப்பியிருந்தார்கள். மற்றும் பாரதகண்டத்திலுள்ள அநேகப் பிரதேசங்களிலிருந்து ஏராளமாக பிரபுக்களும், வித்வான்களும், மற்றும் சிஷ்யர்களும் வந்திருந்தார்கள். அதிகோலாஹலத்துடன் கும்பாபிஷேக உத்ஸவம் நடந்தது. ஆசார்யாருடைய வைதுஷ்யத்தையும் உபசாந்தியையும் மந்தஹாஸத்தையும் கண்டு மகிழாதவர் யாரும் இல்லை. ஆதிசங்கர பகவத் பாதாசார்யாரால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த அத்வைத வித்யாபீடத்தில் இம்மஹான் இருந்துவருவது மிகவும் உசிதமென்று யாவரும் உணர்ந்தார்கள்.

கும்பாபிஷேகம் முடிந்த பிற்பாடு ஸ்ரீமத் ஆசார்யார் தான் அறிந்து கொண்டிருந்த விஷயங்களை அனுபவ ஸித்தமாகச் செய்துகொள்ள வேண்டுமென்ற ஊக்கத்துடன் இருந்து வந்தார். வேதாந்த சிரவணத்தில் அதிகாரம் பெற்ற சிலருக்கு பாஷ்

Koviloor Digital Library

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவ
அபிநவ நரஸிம்ஹ பாரதீஸ்வாமிகள்

Koviloor Digital Library



ஸ்ரீ ஜகத்குரு ஸச்சிதாநந்தசிவாபிநவநரஸிம்ஹபாரதீஸ்வாமிகள்

Koviloor Digital Library

யாதி கிரந்தங்களை பாடம் சொல்லிவந்த போதிலும் த்யானத்திலும் தபஸ்ஸிலுமே ஜாஸ்திகாலம் செலவழிக்க வாரம்பித்தார். அவருடைய குருபக்தி விசேஷத்தாலும் ஸ்ரீ சாரதாம்பாள் அனுக்ரஹத்தினாலும் அவருடைய பிரயத்தினம் ஸபலமாகி ஸ்வானுபூதிநிலையை அடைந்தார். ஸாதாரணமாக இந்த ஸ்திதியை அடைய எவ்வளவோ தீவிரமாக பிரயத்தினம் செய்தாலும் அநேக ஜன்மாக்கள் வேண்டியிருக்கும். இவர் சாஸ்திர ஞானத்திலும் ஆத்மானுபவத்திலும் அத்விதீயர் என்ற நிலமையை அதிசீக்கிரம் அடைந்து விட்டார். தங்கள் புத்திரன் இம்மேலான பதவியை அடைந்ததைப்பார்த்து ஸந்தோஷிக்கும் பாக்கியம் அவர் பெற்றோர்களுக்கும் கிடைத்தது. அவர் பிதா கோபால சாஸ்திரிகள் 1919 ஏப்ரலிலும் தாயார் லக்ஷ்மியம்மா 1922 டிஸம்பரிலும் தேஹ வியோகமடைந்தார்கள்.

4. தக்ஷிணதேச யாத்திரை

1923ல் மைசூர் மஹாராஜா அவர்கள் தன்னையும் தன் குடும்பத்தார்களையும் நேரில் வந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஸ்ரீமத் ஆசார்யாரை பிரார்த்தித்துக் கேட்டுக் கொண்டதின் பேரில் 1924 ஜனவரியில் சிருங்கேரியை விட்டுப் புறப்பட்டு யாத்திராக்கிரமமாய் மைசூர் போய்ச்சேர்ந்தார்கள்.

Koviloor Digital Library

மைஸூரில் விசேஷமாக மஹாராஜா அவர்களாலும் மற்றும் யாவராலும் ஸத்காரம் செய்யப்பட்டார்கள். மைசூர் பழய அக்கிரஹாரத்தில் தான் தன் பூர்வாசார்யாரின் ஜன்ம கிருஹம். அந்த கிருஹமும் அதன் பக்கத்திலுள்ள ஸ்தலமும் மைஸூர் மஹாராஜா அவர்களின் ஸஹாயத்தினலும் குனிகல் ராம சாஸ்திரிகள் ஸ்ரீ கண்ட சாஸ்திரிகள் இவர்களுடைய விசேஷ பிரயத்தினத்தினலும் ஸ்ரீ மடத்திற்கு ஸ்வாதீனம் செய்துகொள்ளப்பட்டது. அவ்விடத்தில் ஓர் அழகான கல் கட்டிடம் கட்டி அதில் பூர்வாசார்யாருடைய ஒரு மூர்த்தியும் அமிருத சிலையில் தயாரித்து கும்பாபிஷேகம் செய்து பிரதிஷ்டையானதும் ஸ்ரீமத் ஆசார்யார் குருபக்தி மேலிட்டு ஆனந்த பரவசராயிருந்தார்கள். அவர்களுடைய ஆக்ஞையை அநுஸரித்து பிரதிதினமும் அவ்விடத்தில் வேதாந்த பாடப் பிரவசனம் நடந்து வருகிறது.

மைஸூரிலிருக்கும் போது கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களிலுள்ள சிஷ்யர்கள் மிகவும் பக்தியுடன் வேண்டிக் கொண்டதற்கு இசைந்து கன்யாகுமாரிவரை யாத்திரையாக விஜயம் செய்வதாக ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் அதிகருணையுடன் ஸம்மதித்தார்கள். மைஸூர் ஸம்ஸ்தானத்தில் நடந்த விசேஷஸத்காரத்தை

Koviloor Digital Library

பெற்றுக்கொண்டு அங்குள்ள ஆஸ்திக ஜனங்களை அநுக்ரஹித்துவிட்டு கணவாய் வழியாய் ஸத்திய மங்கலம் வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யாருக்கு தாய்பாஷை தெலுங்கு. தேசபாஷை கன்னடம். சிருங்கேரிக்கு தர்சனத்திற்காக வந்திருந்த சில தமிழ் நாடு சிஷ்யர்களின் பழக்கத்தால் கொஞ்சம் தமிழ் கற்றுக்கொண்டிருந்தார். தமிழ் நாட்டுடன் நேரில் ஸம்பந்தம் ஏற்பட்டது ஸத்யமங்கலத்தில் தான். அவ்வூரிலுள்ள சிஷ்யர்கள் தங்களுக்கு உபதேசமாக சில வார்த்தைகள் சொல்லவேண்டு மென்று கேட்டுக்கொண்டதின் பேரில் தமிழிலேயே உபங்யாஸம் செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களுடன் நெருங்கிப் பழகியிருந்தவர்களுக்குக் கூட ஆச்சர் யத்தையும் தமிழ் தேசத்திலேயே பிறந்தவர்களுக்குக் கூட வியப்பையும் கொடுக்கக்கூடிய ரீதியில் சுத்த மான ஸரளமான தமிழில் உபங்யாஸம் செய்தார்கள். அதுமுதல் தமிழ் ஜில்லாக்கள் பூராவிலும் அநேக மாய் தமிழிலேயே உபன்யாஸம் செய்துவந்தார்கள். பண்டிதகோஷ்டிகள் சேரும் ஸமயத்தில் மாத்திரம் தனக்கு அஸாதாரணமாயுள்ள அத்புதமான மாதிரி யில் ஸம்ஸ்கிருத பாஷையில் பேசுவார்கள். அவர் களுடைய உபதேச மொழிகள் லோகக்ஷேமத்தை உத்தேசித்து அதிபரிசுத்தமான கருணை நிரம்பிய அந்தக்கரணத்துடன் சொல்லப்பட்டபடியால் அநேகம் நாஸ்திகர்களை ஆஸ்திகர்களாகவும்

Koviloor Digital Library

ஆஸ்திகர்களை விசேஷ சிரத்தையுள்ளவர்களாகவும் செய்வதில் நிகரற்றதாகவிருந்தன. மனம் போன போக்கில் நடந்து வருவதிலிருந்து திருப்பப்பட்டு தர்ம மார்க்கத்தில் ஈடுபடும்படி செய்யப்பட்ட மனுஷ்யர்கள் கணக்கற்றவர்கள். அவ்வொவ்வொரு சிஷ்யர்களும எப்படி நல்லவழிக்கு வந்தார்களென்பதைத் தெரிந்து கொண்டாலே வெகு ஆச்சர்யமாகவும் உபகாரமாகவும் இருக்கும்.

கோபிசெட்டிப்பாளையம், ஈரோடு, கரூர், திருச்சி, செட்டிநாடு மார்க்கமாக ராமேசுவரம் போய்விட்டு, மதுரை ஸ்ரீவில்லிப்புத்தூர், குற்றாலம், பாபவிநாசம், திருநெல்வேலி, திருச்செந்தூர், நாங்குனேரி, கன்யாகுமாரி, திருவனந்தபுரம, கொல்லம், வைக்கம் வழியாக ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யாரின் ஜன்மபூமியான காலடி க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார்கள். அந்த ஸ்தலத்தில் பூர்வாசார்யார்களால் 1910ல் ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசார்யாருக்கும் ஸ்ரீ சாரதாம்பாளுக்கும் ஆலயங்கள் கட்டி கும்பாபிஷேகம் அதிக விமர்சையாக நடந்திருந்தபடியால் அந்த ஸ்தலத்தை மேல்மேல் விருத்திக்குக் கொண்டுவந்து அதை ஒரு வித்யா ஸ்தானமாக ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் 1927ல் ஸ்ரீமத் ஆசார்யார் நேரில் போயிருந்த ஸமயம் வேதாந்த சாஸ்திர பாடசாலை யொன்று ஆரம்பித்து வைத்தார்கள். ஒரு

Koviloor Digital Library

வேத பாடசாலையும் ஏற்படுத்த வேண்டுமென்றும் உபாத்யாயர்களுக்கும் வேதாந்த வித்யார்த்திகளுக்கும் ஆலயங்களில் கைங்கர்யம் செய்கிறவர்களுக்கும் மற்றும் தர்சனார்த்தம் வருகிற பிராஹ்மணர்களுக்கும் வஸிப்பதற்கு ஸௌகர்யமாய் வீடுகள் கட்டி ஓர் அக்ரஹாரம் நிர்மாணம் செய்ய வேண்டுமென்றும் ஆக்ஞை செய்தார்கள். அப்படியே அவர்கள் ஸங்கல்பம்போல் எல்லாம் நிறைவேற்றப்பட்டது. இக்கட்டிட நிர்மாண வேலையில் ஈடுபட்டிருந்த கருங்குளம் ரிடைர்டு எஞ்ஜினீயர் K. R. நாராயண அய்யரவர்களுடைய கைங்கர்யம் மிகவும் குறிப்பிடத்தக்கது.

காலடியிலிருந்து புறப்பட்டு பாலக்காடு, கோயம்புத்தூர் வழியாக நஞ்சன்கூடு வந்து அங்கேயும் ஒரு பாடசாலை ஏற்படுத்திவிட்டு மைசூர்போய் கிரமமாக 1927 முடிவில் சிருங்கேரிக்குத் திரும்பிவந்து சேர்ந்தார்கள். யாத்திரை மத்தியில் கோபிசெட்டிப்பாளையம், குன்னக்குடி, பாபவிநாசம், நஞ்சன்கூடு, ஆகிய நான்கு இடங்களில் சாதுர்மாஸ்யத்திற்காக தங்கினார்கள். இவ்விதமாக யாத்திரை நான்கு வருஷம் நடந்தது

யாத்திரை காலத்திலும் மற்றும் ஸமயங்களிலும் இவர்களை தர்சனம் செய்து பலவிதமாக நன்மை பெற்று கிருதார்த்தர்களான ஜனங்கள் கணக்கில்

Koviloor Digital Library

அகப்படா. கர்ம, உபாஸனா ஞானமார்க்க சாஸ்திரங்களிலோ தர்க்க வியாகரண மீமாம்ஸாதி சாஸ்திரங்களிலோ யாரும் நெருங்குவதற்கில்லாமல் விசேஷமான ஞானத்தினால் ஸகலவிதமான வித்வான்களாலும் போற்றப்பட்டார்கள். ஸாமான்யமான பாமரஜனங்கள் உள்பட யாவராலும் ஸ்ரீமத் ஆசார்யரவர்களே தனக்கு மிகவும் ஆப்தனென்றும் வழிகாட்டியென்றும் பாவிக்கப்பட்டார்கள். எல்லாரிடத்திலும் அவருடைய அன்பு ஏகரூபமாக இருந்துவந்தது லௌகிக பதவியில் மேல் அந்தஸ்துள்ளவர்களும் கீழ்ப்பட்டவர்களும், தனவான்களும் எளியவர்களும், வித்வான்களும் பாமரர்களும், கிருஸ்துவர்களும் மஹமதியர்களும், நாஸ்திகர்களும் ஆஸ்திகர்களும், ஸ்திரீ பால விருத்தர்களும், யாவருமே ஒரே ரீதியாக ஆசார்யாரவர்களுடைய அன்புக்கு பாத்திரமானார்கள். அவருடன் சில நிமிஷங்களாவது கூடவிருக்கும்படியான பாக்கியமடைந்த யாரும் தன்னிடத்தில் தன்னைத்தெரியாமலே ஒரு தெளிவும் அறிவும் ஸந்தோஷமும் ஏற்படுவதை உணர்ந்தார்கள். லோகத்தில் மிகவும் பிரஸித்தி பெற்றிருந்த வித்வான்களும் இவர் முன்புக்குத் தங்கள் அறிவு மிகவும் ஸ்வல்பமென்று உணர்ந்தார்கள். லௌகிக அந்தஸ்திலோ தனத்திலோ பெருமைகொண்டவர்கள் இவர் முன்னிலையில் தங்கள் சிறுமையை உணர்ந்தார்கள். இவருடைய ஞாபகசக்தி விலக்ஷணமாயிருந்ததுடன்

Koviloor Digital Library

சிலவேளை பயத்தையும் உண்டுபண்ணும். மந்திர சாஸ்திரங்களிலும், ஆகமங்களிலும் இவர்களுக்கிருந்த விசேஷ ஞானத்தினால் கிருஹங்களிலோ ஆலயங்களிலோ பூஜா விஷயத்தில் இவர்கள் செய்திருக்கும் சீர்திருத்தங்களும் உபதேசங்களும் கணக்கற்றவை.

5. சில லீலைகள்

தன்னுடைய தபஸ்ஸிற்கு எவ்வித பாதகமுமன்னியில் தன் யோக சக்தியையும் மந்திர சக்தியையும் விளையாட்டாகக் காட்டி சிஷ்யர்களை அனுக்ரஹித்த ஸந்தர்ப்பங்கள் அநேகம். அவைகளை எடுத்துச் சொல்வது ஸாத்தியமில்லையானாலும், உதாஹரணமாக சில ஸம்பவங்களை இதில் கூறுகிறேன்.

1. மிகவும் ஆசாரசீலரான ஒரு பிராஹ்மணர் தன் பூஜையை ஸ்ரீமத் ஆசார்யாரவர்களிடம் கொடுத்து அவர்களுடைய அனுக்ரஹத்துடன் திரும்பி வாங்கிக்கொள்ள வேண்டுமென்று நினைத்து பூஜைப் பெட்டியைக் கொண்டுவந்து ஸமர்ப்பித்தார். அப் பெட்டியைத் திறந்து அதிலுள்ள மூர்த்திகளை எடுத்துஸ்ரீமத் ஆசார்யார் கவனித்து வருகையில் ஒரு ஸாலக்கிராமத்தை கையில் எடுத்துப் பார்த்தவுடன்

Koviloor Digital Library

"ஸ்வாமி ஏழு வருஷமாக பட்டினி போலிருக்கிறதே" என்று சொன்னார்கள். அந்த சிஷ்யர் திடுக்கிட்டு,

"எனக்குத்தெரிந்து அப்படி ஒரு அபசாரமும் செய்யவில்லையே" என்றார். அதற்கு ஸ்ரீமத் ஆசார்யார்,

"நீங்கள் பூஜை சரியாய்ப்பண்ணவில்லையென்று தெரிகிறது. இந்த மூர்த்திக்கு நித்தியம் க்ஷீராபிஷேகமும் பால் பாயஸம் நிவேதனமும் செய்யவேண்டும். ஏழு வருஷகாலமாக நடக்கவில்லையென்று தெரிகிறது."

என்று சொன்னார்கள். அதன்பேரில் சிஷ்யர்,

"இப்பொழுது ஞாபகம் வருகிறது. என் தகப்பனார் இருக்கும்போது அப்படியே தான் அபிஷேகமும் நிவேதனமும் செய்து வந்தார். அவர் இருக்கும் போதே நான் தனியாக பூஜை ஆரம்பித்துக்கொண்டு விட்டபடியால் அவர் காலம் சென்ற பிறகு அவருடைய பூஜையையும் என் பூஜையுடன் சேர்த்துக் கொண்டு எல்லா மூர்த்திகளையும் வித்யாஸமன்னியில் ஒரே விதமாக அபிஷேகம் நிவேதனம் செய்து ஆராதனம் செய்து வருகிறேன்" என்றார்.

அதற்கு ஸ்ரீமத் ஆசார்யார்,

"அப்படியானால் உங்கள் பிதா இறந்து இப்பொழுது ஏழு வருஷங்கள் ஆயினவா?"

Koviloor Digital Library



ஸ்ரீ சங்கரமடம், பெங்களூர்

Koviloor Digital Library

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீசந்த்ரசேகர
பாரதீஸ்வாமிகள் 1912

Koviloor Digital Library

என்று கேட்டார்கள். சிஷ்யர் "ஆம்" என்று ஒப்புக்கொண்டார்.

அதன்பேரில் ஸ்ரீமத் ஆசார்யார் "எல்லா மூர்த்திகளையும் ஒன்றாக வைத்து ஒரே மாதிரியாக ஆராதனம் செய்வது உசிதமில்லை. இனியாவது இந்த மூர்த்திக்கு நான் சொன்னபடி தனியாக பூஜை செய்யுங்கள்" என்று ஆக்ஞாபித்தார்கள். மூர்த்தி பூஜையில் நம்பிக்கையில்லாதவர்களுக்கு இந்த ஸம்பவம் பொய் அல்லது நம்பத்தக்கதில்லை என்று தோன்றும். ஜகத்பூராவும் வியாபகராயிருக்கிற ஈசுவரன் சில பதார்த்தங்களில் விசேஷமாக ஸாந்நித்யம் அடைந்திருக்கிற விஷயம் ஞானிகளின் திருஷ்டிக்கு நன்கு புலப்படுமென்று நம்புகிற ஆஸ்திகர்களுக்கு இந்த ஸம்பவம் ஒரு விசேஷமான உபதேசமாகவே ஏற்படும்.

2. ஓர் ஊரில் ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் சிஷ்யர்களுக்கு தீர்த்தப்பிரஸாதம் கொடுத்துக்கொண்டிருந்த ஸமயத்தில், ஒரு பெண் தன்னுடன் அழைத்துவந்த தன் குழந்தையின் கழுத்தில் போட்டிருந்த சங்கிலியைக் காணாமல் கூக்குரலிட்டாள். அங்கே சப்தம் செய்யக்கூடாதென்று அவளுடன் இருந்தவர்கள் சொல்லி அவளை தீர்த்தம் வாங்கிக் கொள்ளும்படி சொன்னார்கள். அவள் அப்படியே தன் துக்கத்தை அடக்கிக்கொண்டு ஸ்ரீமத் ஆசார்யார்

Koviloor Digital Library

ஸமீபம் போய் தீர்த்தத்திற்காக வலது கையை நீட்டினாள். ஆனால் அவர்கள் அவளை விலகி நிற்கும் படி ஜாடை செய்தார்கள். அவளுக்குத் துக்கம் அதிகரித்து பக்கத்தில்போய் பிரயித்து நின்றாள். மற்றவர்களுக்கு கிரமப்படி தீர்த்தம் கொடுத்து வருகையில் ஒரு கிழவி கையை நீட்டினவுடன் மிகவும் தாழ்ந்த குரலில் ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் "கொடுத்துவிடுங்கள்" என்று சொன்னார்கள். அவள் "எதை ?" என்று கேட்டாள். "எடுத்ததை" என்று ஸ்ரீமத் ஆசார்யார் சொன்னதும், "நான் ஒன்றையும் எடுக்கவில்லை" என்று அவள் சொல்ல, "ஜாஸ்தி பாபம் வேண்டாம்" என்று ஸ்ரீமத் ஆசார் யார் சொன்னார்கள். உடனே பக்கத்திலுள்ள சில ஸ்திரீகள் அவளைப் பிடித்துக் கொண்டு அவளு டைய மடியிலிருந்து சங்கிலியை எடுத்து ஆசார் யார் முன்பு வைத்தார்கள். பிறகு அந்தப் பெண் ணைக் கூப்பிட்டு தீர்த்தம் கொடுத்துவிட்டு "சங் கிலியை எடுத்துக்கொள். இனிமேல் வேண்டா மென்கிற கார்யத்தை செய்யாதே" என்று சொன் னார்கள். அவள் மிகவும் பச்சாத்தாபத்துடன் "இனிமேல் செய்யவில்லை" என்று சொல்லி உத்திரவு பெற்றுக்கொண்டாள். பின்னால் விசாரிக்கையில் அவ ளுடைய பர்த்தாவுக்கு குமஸ்தா உத்யோகமென் றும் தனக்கு ஆஹாரம் செய்வித்துவிட்டு பூஜைக்கு போகலாமென்று அவர் சொல்லியிருந்தும் ஆஹா

Koviloor Digital Library

ரத்தை தயாரித்து மாத்திரம் வைத்துவிட்டு பர்த் தாவையே எடுத்துப் போட்டுக் கொள்ளும்படி சொல்லிவிட்டு இவள் பூஜை பார்க்க வந்துவிட்ட தாக தெரிந்தது. தன் கடமையைச் செய்யாமல் பகவானிடத்தில் பக்தி காட்டுவதாகச் சொல்வது நியாயமில்லை யென்பதை இந்த ஸம்பவத்தினால் ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் காட்டியிருக்கிறார்கள்.

3. ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுக்கு முன் பரிசயமில்லாத ஒருவர் ஒருநாள் அவர்களிடம் வந்து நமஸ்கரித்து,

“ஏதோ புண்ணியவசத்தால் இவ்வூருக்கு வரும்படி ஏற்பட்டு தங்களை தர்சிக்கும் பாக்கியம் கிடைத்தது” என்று சொன்னார். பிறகு “அத்துடன் ஒரு உபதேசமும் தாங்கள் அநுக்ரஹம் செய்தால் மிகவும் க்ருதார்த்தனாவேன்.” என்று வேண்டிக்கொண்டார். உடனே ஸ்ரீமத் ஆசார்யார் நிமிர்ந்து அவரை உற்று நோக்கி கொஞ்சம் கடுமையான குரலில்,

“மாத்ருதேவோ பவ—என்பது கேழ்விப்பட்டிருக்கிறீரா?” என்று கேட்டார்கள். அவர் “ஆம்” என்று பதில் சொன்னதும்,

“பித்ருதேவோ பவ—என்பதும் கேழ்விப்பட்டிருக்கிறீரா?” என்று கேட்டார்கள். அதற்கும் அவர் “ஆம்” என்று சொன்னதும்,

Koviloor Digital Library

"ஆசார்யதேவோ பவ—என்பதும் கேள்விப் பட்டிருக்கிறீரா!" என்று கேட்டார்கள். அதற்கும் அவர் "ஆம்" என்று பதில் சொன்னவுடன்,

"முதல் இரண்டும் ஆகட்டும். அப்புறம் இங்கு வாரும்" என்று மிகவும் கண்டிப்பாய்ச் சொன்னார்கள். இதைக் கேட்ட அவர் நடுநடுங்கிக் கொண்டு கீழே விழுந்து நமஸ்கரித்து நீர் ததும்பிய கண்களுடன்,

"என்னால் முடிந்தவரையில் பெற்றோர்களை ஸேவித்து வருகிறேன். அவர்கள்தான் என்னிடம் பிரியமாயில்லை" என்றார். அதற்கு ஸ்ரீமத் ஆசார்யார்,

"இந்த விதிகள் உமக்குத்தான். அவர்கள் பிரியமாயிருந்தால்தான் இந்த வாக்கியங்களுக்கு பிராமாண்யமென்பது கிடையாது. உங்கள் கடமையை நீங்கள் செய்யவேண்டும். செய்துவந்தால் அவர்களுடைய பிரீதிக்கும் பாத்திரமாவீர். இதை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்" என்றார்கள். "அப்படியே ஆகட்டும்" என்று சிஷ்யர் ஏற்றுக்கொண்டார்.

இவ்வுபதேசம்தான் இவருக்கு மிகவும் உசிதமும் அவசியமும் என்று ஸ்ரீமத் ஆசார்யார் எவ்விதம் தெரிந்துகொண்டார்கள் என்பதைப் பற்றி வாச

Koviloor Digital Library

கர்கள் அவரவர்கள் மனப் போக்குப் பிரகாரம் ஊகித்துக்கொள்ளலாம்.

4. ஒரு சிறுவன் 20-வது வயதில் விவாஹம் செய்துகொண்டான். மறுவருஷத்திலேயே பெண் சாதியுடன் சண்டையிட்டுக்கொண்டு அவளை பிறந் தகத்திற்கு அனுப்பிவிட்டான். பிறகு வேறு ஒரு பெண்ணை விவாஹம் செய்துகொண்டான். அவளை யும் அப்படியே விரட்டிவிட்டான். இந்த ஸம்ப வங்களால் அவனுடைய மனது மிகவும் உடைந்து போய் இனி தான் கிருஹஸ்தனுயிருக்க லாயக்கில்லை என்று தீர்மானித்துக்கொண்டான். ஸந்யாஸத் திற்கு கொஞ்சமேனும் அர்ஹனில்லையென்பதையும் நன்கு உணர்ந்தான். ஆத்மஹத்தி செய்ய நினைத் ததில் பரலோக பயம் குறுக்கே நின்றது. எங்கே யாவது தெரியாத இடங்களுக்கு ஓடிப்போய்விட லாமா என்று யோசித்துக் கொண்டிருக்கும் ஸமயம் ஸ்ரீமத் ஆசார்யார் எல்லோருக்கும் மிகவும் ஆப்தரா யிருந்து அவரவர்களுக்கு ஏற்பட்ட சிரமங்களை நிவிருத்தி செய்து கொடுக்கக்கூடிய சக்தியும் கருணை யும் உடையவர் என்று கேள்விப்பட்டு அவர்களிடம் சென்று தன் துக்கங்களைத் தெரிவித்தான். ஸ்ரீமத் ஆசார்யார் அன்புடன் அவன் வரலாற்றைக் கேட்டு பிற்பாடு அவனுக்கு ஒரு மந்திரத்தை உபதேசம் செய்து இதை நித்தியம் இத்தனை தடவை வீதம்

Koviloor Digital Library

தொன்னூறு நாள் ஜபித்துவர வேண்டுமென்றும் அதன்பிறகு தன்னை வந்து பார்க்கும்படியாகவும் சொன்னார்கள். அவர்கள் சொன்ன கெடு முடிவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக அவன் மூத்த ஸம்ஸாரத்தின் தகப்பனார் தன் பெண்ணைத் தானே அழைத்துக் கொண்டுவந்து ஒருநாள் காலையில் இருட்டு வேளையில் இவன் வீட்டு வாசற் திண்ணையில் உட்கார வைத்துவிட்டு தான் வந்தது தெரியாமலே திரும்பிவிட்டார். இப்பெண் நடுங்கிக் கொண்டு அங்கேயே உட்கார்ந்துகொண்டிருக்கும் பொழுது காலை ஐந்து மணி சுமாருக்கு இவன் வாசற்கதவைத் திறந்து வெளியில் வரும் ஸமயம் ஒரு சிறுபெண் இருக்கக் கண்டு ஆச்சர்யப்பட்டான். கவனித்துப் பார்த்ததில் அவள் தான் விரட்டிய முதல் ஸம்ஸாரம் என்று தெரிந்துகொண்டான். தன்னுடைய கௌரவத்திற்கும் மானத்திற்கும் ஒரு வித குறைவுமன்னியில் அவளாகவே திரும்பி வந்ததில் உள்ளூர ஸந்தோஷமிருந்தபோதிலும் அவளைப் பார்த்து "நீ எப்படி இங்கே வந்தாய்?" என்று அதட்டினாற்போல் கேட்டான். அதற்கு அவள் தன் தகப்பனார் செய்த கார்யத்தைச் சொன்னாள். அவளை உள்ளே போகச் சொன்னான். கொஞ்ச நேரத்தில் அவர்கள் ஸமாதானத்தை அடைந்து விட்டார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ? இது

Koviloor Digital Library

நடந்த சிலநாட்களுக்குப் பிறகு இரண்டாவது ஸம்ஸாரத்தின் தகப்பனுர் இதைப்பற்றி கேள்விப்பட்டு அவரும் இதேமாதிரி செய்துவிட்டார். அவளையும் ஸ்வீகரிக்கும்படி ஏற்பட்டது. இப்பொழுது இரண்டு மனைவிகளும் வீட்டுக்கு வந்துவிட்டபடியால் என்ன செய்வதென்ற யோசனை மறுபடியும் இவனுக்கு ஏற்பட்டது. ஸ்ரீமத் ஆசார்யாரவர்களை தர்சித்து அவர்களிடம் ஸதுபதேசம் பெற்று நன்கு இல்லறம் நடத்திவந்தான்.

5. ஒருவர் ஒரு முனிஸீப்கோர்ட்டில் குமஸ்தாவாக இருந்தார். அவர் மிகவும் யோக்யர். தன் கடமைகளை ஒருவித குறைவுமன்னியில் சரிவரச் செய்துவந்தார். ஆனுல் நாக்கை அடக்கிப் பேச சக்தி யற்றவர். மேல் உத்யோகஸ்தர் ஏதேனும் கட்டளையிட்டால் அதை நன்கு நிறைவேற்றும்போதே, "நியாயமான விஷயமாயிருந்தால் குழந்தை சொன்னுலும் கிளி சொன்னுலும் கேட்க வேண்டியது தானே" என்று அவ்வதிகாரியிடமே சொல்லிவிடுவார். இது அவ்வதிகாரிக்கு கோபத்தை உண்டு பண்ணிவிடும். அதனுல் அநேகம் தடவை அவர் உத்யோகத்திற்கு இடைஞ்சல் ஏற்பட்டு ஒரு ஸமயம் தாத்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டார். இவருடைய ஸம்ஸாரம் இவரைப் பார்த்து "ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் அநேகர்களுக்கு

Koviloor Digital Library

ஏற்பட்டிருக்கும் பலவிதமான சிரமங்களை நிவிருத்தி செய்து கொடுப்பதாக கேள்விப்படுகிறேன். நீங்களும் அவர்களிடம் போய் அநுக்ரஹம் பெறலாகாதா?" என்று கேட்டாள். அதற்கு அவர் "எனக்கு ஆசார்யார் என்ன செய்ய முடியும்? என் நாக்கில் சனி இருக்கிறது. அதற்கு அவர் என்ன செய்வார்?" என்று சொன்னார். அவள் "கேட்டுப் பாருங்களேன்" என்று சொன்னாள். அவள் இவ்வளவு வற்புறுத்தியதின் பேரில் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் சென்று ஸமாசாரங்களைத் தெரிவித்து "என் நாக்கில் சனி இருக்கிறது. இருந்தாலும் தங்களைக் கேட்கும்படி என் ஸம்ஸாரம் வற்புறுத்தியதினால் வந்தேன். எனக்கு ஏதேனும் அனுகூலம் செய்ய முடியுமானால் செய்யவேண்டுகிறேன்" என்று சொன்னார். இப்பிரார்த்தனையை ஸ்ரீமத் ஆசார்யார் புன்சிரிப்புடன் கேட்டுக்கொண்டு மறுநாள் காலையில் வரும்படி உத்திரவிட்டார்கள். மறுநாள் அவருக்கு ஒரு மந்திரத்தை உபதேசித்து ஒருநாளைக்கு இத்தனை ஜபம் ஆக வேண்டுமென்றும் இரண்டுவாரம் கழித்து தன்னை வந்து பார்க்கும்படியும் சொல்லியனுப்பினார்கள். அப்படியே அவர் சிரத்தையுடன் ஜபம் செய்துவந்தார். இதற்கு ஒருவாரம் கழித்து இவர் வேலை பார்த்துவந்த கச்சேரியை மேல்பார்ப்பதற்காக ஜில்லா ஜட்ஜ் வந்த ஸமயம் சில பதிவு

1100
Q1:3320

Koviloor Digital Library

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சந்த்ரசேகர பாரதீஸ்வாமிகள்
1916

Koviloor Digital Library

ஸ்ரீ ஜகத்குரு
ஸ்ரீ சந்த்ரசேகரபாரதீஸ்வாமிகள் 1925

Koviloor Digital Library

புஸ்தகங்கள் வெகு தெளிவாகவும், நன்றாகவும் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு ஸந்தோஷித்து அதை எழுதின குமஸ்தா யார் என்று கேட்டார். முனிஸீபின் சிபார்சின் பேரில் தானே அந்த குமஸ்தாவை வேலையிலிருந்து தாத்காலிகமாக விலக்கி வைத்திருப்பதாகத் தெரிந்துகொண்டார். இந்த குமஸ்தாவின் யோக்கியதையை யறிந்து வேலை வாங்க முனிஸீபுக்கு சக்தியில்லை யென்பதை உணர்ந்தார். உடனே தன் முன் உத்திரவை ரத்துசெய்து அவரிடமே மேலந்தஸ்துள்ள ஒரு உத்தியோகம் கொடுத்து மாற்றிக்கொண்டார். குமஸ்தாவும் மிகுந்த ஸந்தோஷத்துடன் புதிய வேலையை ஒப்புக்கொண்டார். இதற்குள் ஸ்ரீமத் ஆசார்யார் குறிப்பிட்ட இரண்டுவாரம் ஆகிவிட்டபடியால் அவர்களைக் கண்டு நமஸ்கரித்து நடந்ததையெல்லாம் மிக்க நன்றியுடன் தெரிவித்தார். பிறகு "எனக்கு உத்தியோகம் மறுபடியும் கிடைத்துவிட்டபடியால், இனி மந்திர ஜபத்தை நிறுத்திவிடலாமா?" என்று கேட்டார். ஸ்ரீமத் ஆசார்யார் புன்சிரிப்புடன் "உங்கள் நாக்கில் சனி இருக்கும் வரை ஜபிக்கவேண்டியதுதான்" என்று சொன்னார்கள். அதன்பிறகு ஒருவித சிரமமுமன்னியில் அவர் வேலை பார்த்து விட்டு சில வருஷங்கள் கழித்து கௌரவமாக உபகார சம்பளத்துடன் வேலையிலிருந்து விலகி ஸௌகர்யமாயிருந்தார்.

Koviloor Digital Library

மந்திரங்களின் பிரபாவம் தெரியாதவர்கள் இந்த ஸம்பவங்கள் எல்லாம் அகஸ்மாத்தாய் ஏற்பட்டதாக சொல்வார்கள். இது ஒரு ஸமாதானமாகாது. நம் மத ரீதியாக மந்திரங்கள் சக்தி வாய்ந்தவைகள் என்றும் மந்திர ஜபம் செய்கிறவர்களுக்கும் சுற்றியிருப்பவர்களுக்கும் விசேஷமான அனுகூலங்களை அளிக்கக்கூடியவை யென்றும் நம்புகிறோம். ஆனால் விசேஷ ஆத்ம சக்தி வாய்ந்த பெரியோர்களிடமிருந்து கிடைத்தால்தான் அவ்வித மதிப்பு உண்டு. இல்லையானால் அவைகள் வெறும் சப்தமேயாகும். அவைகள் மின்சாரவிளக்குக் கண்ணாடிக்கூடு மாதிரி. மின்சாரசக்தியுடன் ஸம்பந்தமிருந்தால்தான் பிரகாசம் கொடுக்கும். இக்காலத்தில் அநேக ரஹஸ்யமான மந்திரங்கள்கூட ஸுலபமாக அச்சிடப்பட்டு யாவராலும் தெரிந்துகொள்ளக்கூடிய ஸ்திதியிலிருப்பதால் பிரயோஜனமற்றுப் போகின்றன. நன்கு சக்திவாய்ந்த குருவினால் தகுந்த அதிகாரிக்கு உபதேசம் செய்யப்படும் விஷயத்தில் நன்கு ஸபலமாகும். மின்சார சக்தியின் ஸம்பந்தத்தை எடுத்துவிட்டு கண்ணாடிக் கூடு எரியவில்லை யென்று அதன்பேரில் குற்றம் சொல்வதில் பிரயோஜனமில்லை.

மேலே கண்ட ஸம்பவங்களை உதாஹரிப்பதினால் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய மஹிமை எள்ளளவேனும் சொன்னதாக ஆகாது என்பதை நன்கு உணர்கிறேன்.

Koviloor Digital Library

6. அதீத நிலை.

ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் ஸ்வபாவமாகவே ஏகாந்த வாஸத்தில் ருசியுள்ளவர்கள். தக்ஷிண தேசத்தில் நான்கு வருஷம் ஸஞ்சாரம் செய்து விட்டு சிருங்கேரிக்குத் திரும்பி வந்தது முதல் தபஸ்ஸிலேயே ஜாஸ்திகாலம் செலவழிக்க வேண்டு மென்று தீர்மானித்தார்கள். ஸாதாரண ஜனங்களுடன் ஸல்லாபம் செய்வதைக் குறைத்துக்கொண்டார்கள். ஸ்ரீமடம் கார்யங்களில் முன் எடுத்துக் கொண்டிருந்த ஸ்வல்ப அக்கரையைக்கூட எடுத்துக் கொள்வதை நிறுத்தி விட்டார்கள். பற்றற்ற நிலை நாளுக்கு நாள் விருத்தியாய்க் கொண்டு வந்தது. உலக வியாபாரங்களை மறந்திருக்கும் காலம் அதிகமாகிக் கொண்டிருந்தது. இப்படியே அவர் இருந்து விடும்பக்ஷத்தில் ஸ்ரீமடம் கார்யங்களில் இடைஞ்சல் ஏற்படக் கூடுமென்று அநேகர் நினைக்க இடம் கொடுத்தது. தனக்குப் பிறர் இந்த ஸ்தானத்தை வஹிக்க ஒருவரை ஏற்படுத்துவது உசிதமென்று ஆசார்யாரவர்கள் நினைத்து பங்களூர் ஸ்ரீராம சாஸ்திரிகளுடைய ஜ்யேஷ்ட குமாரரான பாலனுக்கு கிரமப்படி 1931 மே 22-ல் ஸன்யாஸம் கொடுத்து அபிநவ வித்யா தீர்த்தர் என்ற யோக பட்டத்துடன் அபிஷேகம் செய்து வைத்தார்கள். அந்த ஸமயத்தில் அதற்கு முன் நாற்பது வருஷங்களுக்கு மேலாக

Koviloor Digital Library

மிகவும் ஊக்கத்துடனும் வல்லமையுடனும் பக்தி யுடனும் ஸ்ரீமடத்தில் ஸர்வாதிகாரி ஸ்தானம் வஹித்துவந்த ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் தன் வயதை உத்தேசித்து உத்தியோகத்திலிருந்து விலகிக்கொண்டார். ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் சின்ன ஸ்வாமிகளுடைய தினசர்யையிலும் வித்யாப்பியா ஸத்திலும் மிகவும் அக்கரை யெடுத்துக்கொண்டு தகப்பனுர் மாதிரி கவனித்துக்கொண்டு வந்தார்கள். அநேகம் ஸமயங்களில் தானே பாடம் சொல்லியும் வந்தார்கள். காலக்கிரமத்தில் இதுவும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. அவசியமான நித்யா ஹ்நிகம் பூஜை இவைகளுக்கு உபயோகப்படுகிற காலங்களைத்தவிர மற்ற ஸமயங்களில் தனித்திருக் கவே பிரியப்பட்டார்கள். பூஜாதிகளும் கொஞ்சம் கொஞ்சமாகக்குறைந்து அநேகமாய் ஏகாந்தத்தி லிருந்து ஆத்மநிஷ்டையிலேயே இருக்க வாரம்பித் தார்கள். இந்த ஸமயத்தில் ஸ்ரீமடம் நிர்வாஹப் பொறுப்பை மைசூர் மஹாராஜாவின் ஸர்க்காரே தாத்காலிகமாக ஏற்று நடத்த வாரம்பித்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யார் பேசுவதையும் மிகவும் குறைத்துக் கொண்டார்கள். தர்சனம் கொடுப்பதும் குறைந்தது. தர்சனம் கொடுத்தாலும் ஒரு வார்த்தை அல்லது ஒரு ஜாடை அல்லது ஒரு புன்சிரிப்பு இவைகளைத் தவிர வேறு ஸல்லாபத்திற்கு இடமில்லாமலே மறைந்துவிடுவார்கள். உலகப் பார்வையிலிருந்து

Koviloor Digital Library

உள்ளம் அடங்கி அவர்கள் அநுபவிக்கும் நிலமையைப்பற்றி மற்றவர்கள் அறிவதாவது வர்ணிப்பதாவது ஸாத்யமில்லை. சில பக்தர்கள் இவர்களுக்கு ஏதோ அஸ்வஸ்ததையிருப்பதாக நினைத்து "ஸ்வஸ்தம்" பண்ணப் பிரயத்தினப் பட்டிருக்கிறார்கள். அப்படியே சிலர் இவர்கள் ஒருநாளும் ஸ்வஸ்தராக மாட்டார்களென்று சொல்லி முடித்தவுடனேயே பஹிர்முகமாகிவிட்டதைக் கண்டு ஆச்சர்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய விலக்ஷணமான அநுபவ நிலையில் அவர்கள் தேச காலங்களுக்கு அதீதமாகவே இருப்பதாகத் தெரிகிறது. ஒன்று இரண்டு ஸம்பவங்களை மாத்திரம் இங்கு உதாஹரிக்கிறேன்—

1. ஒரு ஊரில் இரண்டு ஸஹோதரர்கள் இருந்தார்கள். பெயர் பிரகிருதமில்லாததினால் ராமன் லக்ஷ்மணன் என்று வைத்துக்கொள்வோம். தம்பியாகிய லக்ஷ்மணன் மிகவும் ஜ்வரத்தினால் பீடிக்கப் பட்டிருந்த ஸமயத்தில் அவனுக்கு சீக்கிரம் குணமாக ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய அநுக்ரஹத்தை வேண்டிக்கொண்டு தமயனாரான ராமன் ஸ்ரீமடத்திற்கு தந்தி கொடுத்தார். அந்தத் தந்தியை வாங்கின அதிகாரி "இதுமாதிரி விஷயங்களில் ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் அக்கரை எடுத்துக் கொள்ளவா போகிறார்? அவர்தான் உலகத்தை மறந்திருக்கிறாரே!" என்று தனக்குள் சொல்லிக்

Koviloor Digital Library

கொண்டார். கொஞ்சநேரம் கழித்து அவர் ஸ்ரீமத் ஆசார்யாரை தர்சனம் செய்யப்போகும் ஸமயத்தில் ஸந்தர்ப்பம் கிடைத்தால் சொல்லலாமென்று நினைத்து இத்தந்தியையும் எடுத்துக்கொண்டு போனார். அவ்விடம் போய்ச் சேர்ந்ததும் ஆசார்யாரவர்கள்

"கையில் என்ன?" என்று கேட்டார்கள்.

"தன் தமயன் ராமன் ஜ்வரத்தினால் சிரமப்படுவதாக லக்ஷ்மணன் தந்தி கொடுத்திருக்கிறான்." என்று அதிகாரி சொன்னார். உடனே ஆசார்யாரவர்கள்

"தம்பி லக்ஷ்மணனுக்கு உடம்பு சரியில்லையென்று ராமன் தந்தி கொடுத்திருக்கிறான் என்று சொல்லுங்கள்" என்றார்கள். உடனே அதிகாரி தந்தியை எடுத்துப்பார்க்க ஆசார்யார் சொன்னதே சரியாகவிருக்கக்கண்டு,

"மன்னிக்கவேண்டும். நான்தான் தவறுதலாய் சொல்லியிருக்கிறேன். சரியானபடி ஞாபகம் வைத்துக்கொள்ளாமல் மறந்து விட்டேன்" என்றார். ஆசார்யார் புன்சிரிப்புடன்,

"உலகத்தை நான் மறக்கலாம். நீங்கள் மறக்கலாமா?" என்று கேட்டார்கள். அவ்வதிகாரி காலையில் தன் மனதிற் தள் சொல்லிக்கொண்ட வார்த்தை

Koviloor Digital Library

களையே ஆசார்யார் பிரயோகம் பண்ணினதைக் கண்டு மிகவும் ஆச்சர்யமடைந்தார்.

2. ஆசார்யாரவர்கள் ஸாதாரணமாக துங்கா நதிக்குத் தென்புறமுள்ள நரஸிம்ஹவனம் ஆசிரமத்திலேயே வாஸம் செய்வது வழக்கம். வடகரையில் பழய மடத்து கட்டிடங்களும் ஸ்ரீசாரதாம்பாள் ஆலயமும் சிருங்கேரி ஊரும் இருந்து வருகின்றன. ஊர்மத்தியில் அக்கிரஹாரத்தில் ஸ்ரீமடம் அதிகாரிகள் வாஸம் செய்வார்கள். அதற்கும் ஆசார்யார் இருப்பிடத்திற்கும் சுமார் அரை மைல் இருக்கும். மத்தியில் நதியுமுண்டு. ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் அந்தர்முகமாக இருந்த ஸமயம் ஒரு நாள் நடுராத்திரியில் தன்னிடமிருந்த வேலைக்காரனைக் கூப்பிட்டு "அக்கரையில் அக்ரஹாரத்தில் இன்னார் கீழே விழுந்துவிட்டார், உடனே போய் பார்த்துவா" என்று சொன்னார்கள். அர்த்தராத்திரியில் இவ்விதம் ஆக்ஞை கொடுத்ததினால் வேலைக்காரன் கொஞ்சம் தயங்கி நகர்ந்து நின்றுகொண்டான். சில க்ஷணங்கள் கழித்து அறையிலிருந்தபடியே ஆசார்யாரவர்கள் "போனாயா?" என்று கேட்டார்கள். இனிமேல் அவர்களுடைய அதிருப்தியேற்படுமென்று பயந்து அவர்கள் குறிப்பிட்ட அதிகாரியின் வீடுவந்துசேர்ந்தான். வாசற்கதவு உள் தாழ்ப்பாளிட்டு எல்லாம் நிச்சப்தமாக இருக்கக்கண்டான். ஆனால் திரும்பிப்போனால்

Koviloor Digital Library

அவ்வதிகாரியைப் பார்த்தாயா வென்று கேட்டால் என்ன பதில் சொல்லுகிறதென்று பயந்து கதவைத் தட்டினுன். அவ்வதிகாரியே கதவைத் திறந்து கொண்டு வெளியில் வந்து பார்க்க ஆசார்யாரின் வேலைக்காரன் நிற்பதைக் கண்டார். நிசிவேளையில் வந்ததால் ஆசார்யாருக்கு ஏதேனும் அசௌகர்யமோ வென்று கவலையுற்று வினவினர். அவன் நடந்ததைச் சொன்னுன். அதன்பேரில் அவ்வதிகாரி "வாஸ்தவம். சில நிமிஷங்களுக்கு முன் ஜலமோசனத்திற்காக வாசல் பக்கம் வந்து கை கால் அலம்பிவிட்டுத் திரும்பும்போது கல்படியில் வழுக்கிக் கீழே விழுந்து விட்டேன். இரண்டு நிமிஷம் பிரக்ஞையில்லாமலிருந்து மறுபடியும் தன் நினைவு வந்தவுடன் தெருவிலாவது வீட்டிலாவது யாரும் தெரியவிடமன்னியில் ஓசைப்படாமல் வீட்டிற்குள் வந்து படுத்துக் கொண்டுவிட்டேன். இதை ஆசார்யார்எப்படி அறிந்தார்களோ தெரியவில்லை. எப்படியும் அவர்கள் என் விஷயத்தில் வைத்திருக்கும் கருணைக்கு மிகவும் நன்றியுள்ளவனுக இருக்கிறேன். நான் ஸ்வஸ்தமாக இருப்பதாக அவர்களிடம் சொல்லிவிடு" என்று சொன்னர். இந்த ஸம்பவத்தைப்பற்றி அவ்வதிகாரி பின்னல் சொல்லும்போது "இந்த கடைசி வாக்கியம் நான் சொன்னவுடன் என் அசட்டுத் தனத்தை நானே உணர்ந்துகொண்டேன். நான் விழுந்ததை அறிந்த ஆசார்யாரவர்களுக்கு நான்

Koviloor Digital Library



ஸ்ரீ ஜகத்குரு

ஸ்ரீசந்த்ரசேகரபாரதீஸ்வாமிகள் 1926

Koviloor Digital Library

காலடியில் ஸ்ரீமத் ஆசார்யார் 1927

Koviloor Digital Library

எழுந்திருந்து ஸ்வஸ்தமாயிருக்கிறேனென்பது நான் சொல்லியா தெரியவேண்டும்?" என்ருர்.

7. காலடி விஜயம்.

1938-ல் சில பக்தர்கள் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களை பங்களூருக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு அவர்களும் கருணையுடன் ஸம்மதித்தார்கள். ஆனல் வழக்கமாயுள்ள ஆடம்பரத்துடன் வரபிரியப்படாமல் ஸ்வல்ப பரிவாரத்துடன் புறப்பட்டு பங்களூர் வந்து சில மாஸங்கள் தாமதித்தார்கள். பூர்வாசார்யாரவர்கள் காலடி யாத்திரை ஸமயம் பங்களூரில் ஸ்ரீ சங்கர மடம் கட்டுவித்து அதன் முன் பக்கம் வலது பக்கத்தில் ஆதி சங்கரபகவத்பாதாசார்யாரவர்களுக்கு ஓர் ஆலயம் ஏற்படுத்தி கும்பாபிஷேகம் செய்திருந்தார்கள். இப்பொழுது அவ்வாலயத்திற்கு நேர் எதிரில் அதாவது ஸ்ரீ சங்கர மடத்தின் முன் பக்கம் இடது பக்கத்தில் ஸ்ரீ சாரதாம்பாளுக்கு அதே மாதிரி அழகாக ஓர் ஆலயம் நிர்மாணம் செய்து ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். பங்களூரிலிருந்து கோயமுத்தூர் மார்க்கமாய் காலடிக்குப்போய் அங்கு சுமார் பத்து மாஸகாலம் தாமதித்தார்கள். தென் தேசத்திய சிஷ்யர்களுக்கு அவர்களை மறுபடியும் ஸுலபமாய் தர்

Koviloor Digital Library

சிக்கும்படியான பாக்கியம் கிடைத்தது. காலடியில் தாமதிக்கும்வரை வேண்டிய ஸௌகர்யங்களை திருவனந்தபுரம் மஹாராஜா அவர்களே செய்து கொடுத்தார்கள். முன் யாத்திரையில் மாதிரி ஏராளமான ஜனங்கள் தர்சனத்திற்கு வந்தார்கள். மறுபடியும் ஏகாந்த வாஸத்திலேயே நோக்கமிருந்தபடியாலும் சிருங்கேரியில் சின்ன ஸ்வாமிகளவர்கள் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய வரவை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த படியாலும் 1940 ம் வருஷ ஆரம்பத்தில் சிருங்கேரிக்கே திரும்பிவிட்டார்கள்.

சிருங்கேரிக்குத் திரும்பி வந்தது முதல் அவர்கள் அந்தர்முகமாயிருக்கும் ஸமயங்கள் அடிக்கடியும் நீடித்தும் ஏற்பட்டன. அவர்களை தர்சித்து நேரில் அனுக்ரஹம் பெற்றுக்கொள்வது மிகவும் துர்லபமாகிவிட்டது. சிருங்கேரி வித்யா பீடத்தில் இருந்து வருகிற மஹான்களை நாடி லௌகிகமாகவும் வைதிகமாகவும் வேண்டும் உதவியையும் உபதேசத்தையும் வழக்கமாய் பெற்றுவருகிற சிஷ்யர்களுக்கும் ஸாதாரண ஜனங்களுக்கும் இது ஒரு பெரிய நஷ்டமாகவே தோன்றக்கூடியது. ஆனால் இப்பீடத்தை ஏற்படுத்திய ஸ்ரீமத் ஆதி சங்கரபகவத்பாதாசார்யாரவர்களின் உத்தேசம் இக்கலியுகத்திலும் பிரஹ்மாத்மைக்ய ரூபமான அத்வைத அனுபவ நிலை

Koviloor Digital Library

ஸாதிக்கக்கூடியதுதான் என்பதைக்காட்டுவதற்காக என்பதை உணர்ந்தோமேயானால் அவ்வுத்தேசமானது இவ்வாசார்யாரவர்களால் நன்கு நிறைவேற்றப் பட்டுவருகிறது என்பதையும் நன்கு உணர்வோம்.

8. உபதேச முறை.

ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய உபதேசக் கிரமம் விசித்ரமானது. அநேகம் சிஷ்யர்கள் தங்களுடைய ஸந்தேஹங்களை நிவிருத்தி செய்து கொள்ளக் கருதி அவர்களிடம்செல்வார்கள். தங்கள் ஸந்தேஹம் இன்னதென்று எடுத்துச் சொல்வதற்குக்கூட அவசிய மில்லாமல் நிவிருத்தியாகிவிடும். சிஷ்யர்கள் பலர் சேர்ந்து வந்தாலும் அவரவர்கள் மனதில் கேட்க வேண்டுமென்ற விஷயங்களுக்கு பதில் தானாகவே வந்துவிடும். வெகு நாளாக சிரமப்பட்டும் தீராத ஸந்தேஹங்கள் அவர்கள் வாக்கிலிருந்து வரும் ஒரு சிறிய வார்த்தையினால் நிவிருத்தியாவதுமுண்டு. ஏதேனும் கிரந்தத்தில் ஒரு வாக்கியம் அர்த்தமாகாமல் ஒரு சிஷ்யர் அவர்களிடம் கேட்டால் அவ்வாக்யத்தை அவரையே மறுபடியும் வாசிக்கச்சொல்வார்கள். அப்பொழுதே அர்த்தம் நன்கு புலப்பட்டுவிடும். சில ஸமயம் தானே அந்த பங்க்தியை வாசித்துவிட்டு "அர்த்தமாய் விட்டதா?" என்று கேட்பார்கள், "ஆம்" என்றே சிஷ்யர் சொல்லும்படி ஏற்படும்.

Koviloor Digital Library

சில ஸமயங்களில் தான் வாசிக்கும் பொழுதே ஸ்வர விசேஷத்தினுலும் உசிதமான ஸம்ஜ்ஞைகளாலும் அவ்வாக்கியத்திலுள்ள விசேஷார்த்தம் விளங்கும் படி செய்வார்கள். எப்படியும் அதிகமாக வார்த்தைகள் சொல்லி அர்த்தத்தை வெளியிடவேண்டிய அவசியமிராது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு புஸ்தகத்தை முடித்தாகவேண்டுமென்ற எண்ணம் கிடையாது. அநேக வருஷங்கள் ஆனுலும் ஆகும். எல்லா வேதங்களுடைய பரம தாத்பர்யங்களையும் சிற்சில வாக்கியங்களிலோ, சுருக்கமாக சில சுலோகங்களிலோ, ஒரு சின்ன சுலோகத்திலோ அல்லது அரை சுலோகத்திலோ, நம் பெரியோர்கள் அடக்கி எழுதியிருப்பதால் அதில் அடங்கிய தத்வங்களை நன்கு கிரஹித்து உணர்ந்து அனுபவத்திற்குக் கொண்டுவந்தால் அதுவே இலாக்கியமென்றும் கண்டபடி அநேக புஸ்தகங்களை வாசிப்பது கொஞ்சமேனும் அவசியமில்லாத கார்யமென்றும் அவர்களுடைய தீர்மானம். "தத்வம் இன்னதென்று ஸந்தேஹமிருந்தாலும், அதற்கு யுக்தி பிரமாணங்களால் பக்கபலம் கட்டவேண்டுமென்று தோன்றினுலும், அநேகம் கிரந்தங்களை வாசியுங்கள். தத்வத்தில் ஸந்தேஹமில்லாமல் அதை அநுபவத்திற்குக் கொண்டுவருவதில் மாத்திரம் நோக்கமிருக்குமேயானுல் இந்த சிரமம் அனுவசியம். இன்னொருவருக்கு ருசியாக போஜனம் தயாரிக்க வேண்டுமென்று உத்தேசிக்கிற பரி

Koviloor Digital Library

சாரகனுக்கு என்ன என்ன ஸாமான்கள் வேண்டும், ஒவ்வொரு ஸாமானிலும் எவ்வளவு எவ்வளவு எடுத்துக்கொள்ளவேண்டும், அவைகளை எப்படி பக்குவப்படுத்துகிறது, முதலான விஷயங்கள் நன்கு தெரிந்திருக்கவேண்டும். சாப்பிட மாத்திரம் வேண்டியவனுக்கு இவ்விஷயங்கள் தெரியவேண்டிய அவசியமில்லை. அதே மாதிரி மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமிருக்கிற வித்வான்கள் சாஸ்திர வாக்கியார்த்த விசாரங்கள் செய்துகொள்ளட்டும். நீங்கள் அந்த சிரமத்தை வஹிக்க வேண்டாம். அனுபவத்திற்குக்கொண்டுவர மாத்திரம் பிரயத்தினம் செய்யுங்கள். ஸாதாரணமாக ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யாரவர்களுடைய பாஷ்யங்களை நன்கு தெரிந்துகொள்வது தற்காலத்திலுள்ள அத்வைதிகளுக்கு மிகவும் அவசியமென்று எண்ணப்படுகிறது. ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யாரவர்கள் ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெற்ற ஞானிதானே? அவர்கள் ஞானியானது தான் எழுதின பாஷ்யங்களைப்பார்த்தா? அவர்கள் பாஷ்யங்களை எழுதியான பிறகு அதிலுள்ள தத்வங்களைப்பற்றி மனனம்செய்து பிற்பாடே ஞானியானார்கள் என்று வைத்துக்கொள்வோம்; அவர்களுடைய முன் ஆசார்யார்களான கோவிந்தபகவத்பாதாசார்யார், கௌடபாதாசார்யார், சுகாசார்யார், வியாஸ பகவான் இவர்கள் எல்லோரும் ஞானிகளாயிருந்தார்களே, அவர்கள் ஞானி

Koviloor Digital Library

யாவதற்கு ஸ்ரீசாங்கரபாஷ்யத்தையா வாசித்தார்கள்? ஆகையால் ஆத்ம ஞானத்தில் மாத்திரம் நோக்க முள்ள ஒரு மனிதனுக்கு பாஷ்யங்களை நன்கு தெரிந்துகொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் கிடையாது. மேலும், பாஷ்யங்களையும் மேல் கிரந்தங்களையும் நன்கு வாசித்து பிரவசனம் செய்யக்கூடிய அநேக வித்வான்களை பார்க்கிறோம்; அவர்களுக்கு மற்ற வர்களை விட ஆத்மஞானம் கொஞ்சமாவது ஏற்பட் டிருக்கிறதென்று சொல்லமுடியுமா? ஆகையினால் வேதங்களில் சொல்லியதும் நம் முன்னோர்கள் வற் புறுத்தியதுமான ஒரு தத்வோபதேசத்தை உறு தியாகப் பிடித்துக்கொண்டு அதை அனுபவத்திற் குக் கொண்டுவர விசேஷமான பிரயத்தினம் செய் யுங்கள். நீங்கள் மனப்பூர்வமாக பிரயத்தினம் செய் யும் விஷயத்தில் பகவானே வழிகாட்டியாகவிருந்து உங்கள் பிரயத்தினத்தை ஸபலமாக்குவார்" என்று சொல்வார்கள்.

9. சில உபதேசங்கள்.

தர்ம விஷயமாகவும் வீண் சர்ச்சை செய்வதில் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுக்கு திருப்தி கிடையாது. ஏதாவது ஒரு விஷயத்தில் அது எப்படி இது எப்படி என்றுபொதுவாகக்கேட்டால் அவர்கள் பதில் சொல் வது கிடையாது. அப்படியன்னியில் ஒரு குறிப்பிட்ட

Koviloor Digital Library

ஸந்தர்ப்பத்தில், தான் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்று ஒரு சிஷ்யன் கேட்டால், தன்னுடைய உபதேசப்படி அவன் நடப்பானென்று அவர்களுக்கு தோன்றும் விஷயத்தில், அவனுக்குத் தக்கபடி உபதேசம் செய்வார்கள். ஆனால் அவ்வுபதேசம் அவனுக்கு மாத்திரம்தான். இன்னொரு சிஷ்யன் அதே ஸந்தர்ப்பங்களோ அதே யோக்கிதையோ தனக்கிருப்பதாக நினைத்துக்கொண்டு அதே மாதிரி தானும் நடக்கலாமாவென்று கேட்டுவிட்டால், அநேகமாய் கூடாது என்றே பதில் வரும். இவனுக்குத் தக்கபடி வேறு உபதேசம் கிடைக்கும். சிஷ்யர்கள் தங்கள் தங்களுக்குக் கிடைத்த உபதேசங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு சரிபார்த்துக் கொள்வது சரியில்லையென்றும் சொல்வார்கள். ஆகையால் ஒவ்வொருவனும் அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற உபதேசமே பிரயோஜனமுள்ளதென்றும் எல்லோருக்கும் பொதுவாக உபயோகப்படக்கூடிய உபதேசம் யாதொன்றும் கிடையாதென்றும் அவர்கள் அபிப்பிராயம். இதே காரணத்தினால் மத விஷயமாக பொதுஜனங்களை உத்தேசித்து உபன்யாஸம் செய்வது என்பதில் அவர்களுக்கு ஒருநாளும் திருப்தி கிடையாது. அதிலிருந்து சொல்லுகிறவருக்காவது கேட்கிறவர்களுக்காவது எவ்வித பிரயோஜனமும் கிடையாது என்பதே அவர்கள் தீர்மானம்.

Koviloor Digital Library

"பொய் சொல்லக்கூடாது என்று யாருக்கும் தெரியும், ஆனால் பொய் சொல்வதை நிறுத்தத் தயாரில்லை. அவரவர்களுக்கு ஏற்பட்ட ஸுலபமான ஸந்தியாவந்தனாதிகளான நித்திய கர்மாக்களைக் கூட அநுஷ்டிக்க ஜனங்கள் தயாரில்லை. அப்படியிருக்க பிரஹ்மத்தைப்பற்றி விசாரம் எதற்கு? பகவானுடைய பாதஸேவையாகிய கர்ம மார்க்கத்தை நாம் கொஞ்சமேனும் அநுஷ்டிக்காமலே இருந்துகொண்டு அவர் நெற்றியில் விபூதியா நாமமா என்ற விசாரம் நமக்கு எதற்கு? அவர் பெயர் சிவனா நாராயணனா என்பதைப்பற்றி நாம் எதற்கு வியவஹாரம் செய்துகொள்ளவேண்டும்? தர்மமார்க்கம் விசாலமாயிருக்கிறது. அனைவர்களும் குலாசாரப்படி ஸம்பிரதாயப்படி தர்மங்களை அநுஷ்டித்து பகவானை ஆராதிப்போம். அவரவர்கள் அதிகாரத்திற்குத் தக்கபடி கொஞ்சம் கொஞ்சமாக மேலான படிக்குப் போய்ச் சேருவோம். அந்நிலையிலிருந்து பகவானுடைய முகாரவிந்தத்தை நேரில் தர்சனம் செய்யும்படிக்கான பாக்கியத்தை அடைவோம். அப்பொழுது நன்றாய் உற்றுப்பார்த்து அவர் நெற்றியில் விபூதியா நாமமாவென்று தீர்மானித்துக்கொள்ளலாமே? இப்பொழுது நாம் இருக்கும் ஸ்திதியில் இந்த வியவஹாரம் எதற்கு?" என்பார்கள்.

யாரோ ஒருவர் அத்வைத ஸித்தாந்தத்தை

Koviloor Digital Library

மைஸூர் மஹாராஜா நால்வடி
ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார்

Koviloor Digital Library

ஸ்ரீ ஜகத்குரு அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள்

Koviloor Digital Library

தூஷித்துவிட்டாரென்று ரோஷம் கொண்டு ஒரு ஸிஷ்யர் அந்த தூஷணைகளைக் கண்டித்து ஒரு கிரந்தம் எழுதிக்கொண்டுவந்து ஸ்ரீமத் ஆசார்யாரவர்களிடம் காட்டிப் பிரசுரம் செய்ய அனுமதி பெறுவதற்காக வந்தார். அவர்கள் "இதுமாதிரி கிரந்த ரசனையினால் ஏதேனும் புருஷார்த்தம் கிட்டுமா? ஏன் வீணாக உங்கள் சக்தியையும் காலத்தையும் செலவிடுகிறீர்கள்? எல்லா விஷயங்களிலும் ராகத்வேஷத்தை விடும்படி யல்லவா நம் ஸித்தாந்தம் கூறுகிறது? அப்படியிருக்க நம் ஸித்தாந்தத்தையே ராகத்திற்கும் த்வேஷத்திற்கும் விஷயமாக்கிக் கொள்ளலாமா?" என்று கேட்டார்கள். அவர்கள் தர்க்க வேதாந்த சாஸ்திரங்களிலுள்ள நுட்பங்களை நன்கு அறிந்து, தானே சாஸ்திரார்த்த வியவஹாரங்களில் நிகரற்றவராயிருந்தபோதிலும், தத்வ நிச்சயத்திற்குப் பிரயோஜனப்படாமல் வீண் வியவஹாரம் செய்வது நிஷ்பிரயோஜனம், மேலும் த்வேஷத்திற்கே காரணமாகுமென்று அவர்கள் அபிப்பிராயம். ஆகையால் அவர்கள் உபதேசங்கள் எல்லாம் ஸாமான்ய ரீதியிலேயே இருக்கும்.

மடாதிபதி கோவிலூர் மடாலயம்

"ஈசுவரன் ஒருவன் உண்டென்பதை மறக்காதீர்கள். இதைப்பற்றி எங்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டுமா? எங்களுக்கு இதுகூட தெரியாதா? என்று உங்களுக்குத் தோன்றலாம். ஆனால் வாஸ்

Koviloor Digital Library

தவத்தில் ஈசுவரன் ஒருவர் இருக்கிறாரென்பதை நீங்கள் உணர்ந்திருக்கும் விஷயத்தில் ஊர் ஊராக நியாயஸ்தலங்கள் எதற்கு? ஒவ்வொரு லௌகிக நடவடிக்கைகளுக்கும் இவ்வளவு காகிதச் செலவு எதற்கு? பத்திரங்கள் பதிவு செய்வதற்கு இத்தனை அதிகாரிகள் எதற்கு? பத்திரங்களில் சாக்ஷிகளின் கையெழுத்து எதற்கு? இவ்விதமாக ஒவ்வொரு கார்யத்தையும் கவனிக்கும்போது ஈசுவரன் ஒருவர் இருக்கிறாரென்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிறீர்களென்று நினைக்க இடமேயில்லை. ஈசுவரன் ஒருவர் ஸர்வ ஸாக்ஷியாக இருக்கிறாரென் பதை சுத்தமாக மறந்தேயிருக்கிறீர்கள். ஈசுவரன் ஒருவர் இல்லையென்று தீர்மானித்துக்கொண்டே நடந்துவருகிறீர்களென்றே சொல்லலாம். ஆகையால் இவ்விஷயம் உங்களுக்கு சிறியதாகத் தோன்றினாலும் அவசியம் எடுத்துச் சொல்லவேண்டிய விஷயமே.''

''இப்பொழுது அனுபவிக்கும் ஸுக துக்கங்கள் முன் செய்த கர்மவசத்தினால் அனுபவிக்கிறோமென்கிற நம் ஸித்தாந்தத்தை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா? கர்மபலனான துக்கமானது உங்களுடைய பிரயத்தினத்தையாவது விருப்பத்தையாவது கொஞ்சமேனும் எதிர்பாராமல் தானாகவே ஏற்படவில்லையா? அப்படியிருக்க, அதேமாதிரி கர்ம பலனாயிருக்கிற ஸுகமும் உங்களுடைய பிரயத்தி

Koviloor Digital Library

னத்தையும் விருப்பத்தையும் எதிர்பாராமல் வந்து தானே தீரும்? ஸுகத்திற்காக என் வீணாக ஆசையை ஏற்படுத்திக்கொள்கிறீர்கள்? அதற்காக என் வீணாக பிரயத்தினம் செய்கிறீர்கள்? பூர்வகர்மாவினால் நீங்கள் ஸுகம் ஸம்பாதித்திருக்கும்விஷயத்தில் அது தானாகவே வந்துதானே தீரும்? அவ்விதம் ஸம்பாதிக்காமலிருக்கும் விஷயத்தில் நீங்கள் என்ன ஆசைப்பட்டாலும் பிரயத்தினப்பட்டாலும் கூட உங்களுக்கு அந்த ஸுகம் கிடைக்குமா? அப்படியிருக்க வீணாக என் உங்கள் காலத்தையும் பலத்தையும் செலவழிக்கிறீர்கள்? புண்யத்தை ஸம்பாதிப்பதில் செலவழியுங்கள்; ஸுகம் தானாகவே வரும். விஷய ஸுகம் சாசுவதமில்லை, துக்கத்திலும் கொண்டுபோய் விடும். ஆகையால் சாசுவதமான ஆத்ம ஸுகத்தையே அடைய பிரயத்தினம் செய்யுங்கள். இப்பொழுது இருக்கிற ஸ்திதியில் நீங்கள் இன்னொரு ஜன்மம் எடுக்கும்படி ஏற்பட்டால், இப்பொழுது ஸத்கதிக்கு ஸாதகமாக உங்களுக்குக் கிடைத்திருக்கிற ஸௌகர்யங்கள் அப்பொழுது கிடைக்குமென்பது என்ன நிச்சயம்? வீணாக காலத்தைக் கழிக்காதீர்கள். நல்ல விஷயத்தில் உபயோகப்படுத்துங்கள். அர்த்தபரராகவிருந்து ஸந்தோஷத்தையும் திருப்தியையும் கெடுத்துக்கொள்ளாதீர்கள். கூடியமட்டும் மனதை சுத்தமாகவும் பற்றற்றதாகவும் வைத்துக் கொள்ள அப்யாஸம் செய்யுங்கள். மனது பரிசுத்த

Koviloor Digital Library

மாவதற்கு ஈசுவராராதன ரூபமாய் நித்திய கர்மாக் களை சிரத்தையுடன் செய்து வாருங்கள்" என்றிவ் வாறு சிரத்தையையும் கர்மானுஷ்டானத்தையுமே வற்புறுத்துவார்கள்.

ஒருநாள் ஒருபண்டிதரைப் பார்த்து "வழக்கம் போல் பாஷ்யப் பிரவசனம் செய்துவருகிறீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் "தங்கள் அனுக் கிரஹத்தினால் தெரிந்தமட்டில் சொல்லிவருகிறேன்" என்றார். ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய அடுத்த வார்த்தை "நித்தியம் அக்னி கார்யங்கள் செய்து வரு கிறீர்களென்று நம்புகிறேன்" என்பது பண்டிதரை நடுங்கச் செய்தது. அவர் கொஞ்சம் தயங்கி "செய்ய வில்லை" என்று சொல்லிவிட்டு அதற்கு ஸமாதானம் சொல்லவேண்டுமென்ற எண்ணத்துடன் "நான் ஒரு பெரிய பட்டணத்திலிருப்பதால் அங்கு முட்டானுக்கு வேண்டிய கோமயம் கிடைப்பதில்லை" என்று சேர்த் துச் சொன்னார். உடனே ஆசார்யாரவர்கள் கொஞ் சம் கடுமையுடன் "உங்கள் ஊரில் பசுமாடுகள் காப் பிக்குப் பால் மாத்திரம் கொடுக்கின்றன, ஔபாஸ னத்திற்குவேண்டிய முட்டான் தயாரிக்க கோமயம் மாத்திரம் கொடுப்பதில்லையோ?" என்றார்கள்.

அவர்களுடன் கொஞ்சநேரம் இருந்தாலே கர்மா னுஷ்டானத்தில் சிரத்தையும் பகவானிடத்தில் பக்தி

Koviloor Digital Library

யும் தானகவே ஏற்படும். அவர்களுடன் ஸல்லாபம் செய்வதும் அவர்களுடன் மற்றவர்கள் ஸல்லாபம் செய்யும்போது கூடவிருந்து கவனிப்பதுமே, விசேஷமான ஆனந்தத்தையும் நன்மையையும் தரும். ஸாமான்ய விஷயங்களிலிருந்து மேலான தத்வங்களே அவர்கள் போதிக்கும் முறை நிகரற்றது. அவர்களுடைய ஸம்பாஷணரீதியை காட்டக்கூடிய சில உதாஹரணங்கள் "தேசிகன் தேன்மொழிகள்" [English:—"From the Master's Lips"] என்ற புஸ்தகத்தில் காணலாம்.

அவர்கள் இயற்றியிருக்கும் ஸ்தோத்திரங்களில் குருபக்தி, ஈசுவர பக்தி, ஸ்வானுபவம் எல்லாம் ததும்பி நிற்கும். ஏதோ சில ஸ்தோத்ரங்கள் மாத்திரம் ஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணீ விலாஸ அச்சுக்கூடத்தில் பிரசுரமாயிருக்கின்றன. பிரசுரமாகாமலிருப்பவைகளே ஜாஸ்தி. அவைகளே ஸ்ரீமத் ஆசார்யாரவர்களிடமிருந்து அச்சிடக்கேட்டு வாங்குவது சிரமமான கார்யம். ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யாரவர்களின் விவேகசூடாமணி என்ற கிரந்தத்திற்கு பூர்வாசார்யாரவர்கள் வியாக்கியானம் எழுதவாரம்பித்து விட்டதை இவர்கள் அநேகமாய் பூர்த்தி செய்திருக்கிறார்களென்று தெரிகிறது. ஆனல் வெளியில் வரவில்லை. அக்கிரந்தம் மிகவும் ஊக்கமுள்ள அதிகாரிகளுக்கே உரித்தானதென்றும் உபதேசக் கிரமமாய் தெரிந்து

Koviloor Digital Library

கொள்ளவேண்டியதே தவிர அச்சிட்டு எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்வதில் யாதொரு நன்மையும் கிடையாது என்றுமே அவர்கள் அபிப்பிராயம். ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் தத்காலமிருக்கும் நிலையில் இனிகிரந்தம் எழுதுவார்களென்று நினைப்பதற்கில்லை. ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யாரவர்கள் ஒரு ஸமயத்தில் தன்னுடைய சிஷ்யரான ஹஸ்தாமலகரைப்பற்றி சொல்லும்போது "என்னுடைய பிரஹ்மஸூத்திர பாஷ்யத்திற்கு இவர் வார்த்திகம் எழுதினால் மிகவும் நன்றாகத்தானிருக்கும். ஆனால் அவர் இருக்கும் ஆத்ம நிஷ்டை நிலையிலிருந்து கிரந்தம் எழுதும் நிலைக்குக் கீழே இறக்குவது சிரமப்படும்" என்று சொன்னார்கள். அதே ரீதியில்தான் இப்பொழுது ஸ்ரீமத் ஆசார்யார் இருந்து வருகிறார்கள்.

ஆதி குருவான ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யார் தன்னுடைய ஆத்மானுபவத்திற்குக் குறைவன்னியில் எப்படி உலகத்தில் கலந்துகொண்டு தர்ம மோக்ஷ மார்க்கங்களை நிலைநிறுத்தினார்களோ, அதே மாதிரி இவர்களும் கருணைகூர்ந்து பஹிர்முகமாயிருந்துகொண்டே அனுக்ரஹிக்கலாம் அல்லது பகவான் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி முதற்கொண்டு நம் புண்ணிய பூமியில் இருந்துவந்த மஹான்களைப்போல இவர்களும் மௌனமாகவேயிருந்துகொண்டு தங்கள் ஆத்ம சக்தியை ஜகத்தில் பூராவும் பரவும்படி செய்து

Koviloor Digital Library

அநுக்ரஹித்தாலும் லோக க்ஷேமமேயாகும். இப்பெரியோர்கள் அவதரித்திருக்கும் காலத்தில் நாமும் ஜன்மமடையும்படியிருந்த மஹத்தான புண்யம் அவர்களையண்டி அவர்களுடைய கருணாகடாக்ஷம் பெற்று கடைத்தேரவேண்டிய வழியில் நம்மைக் கொண்டு போய்விட வேண்டுமென்று பகவானை பிரார்த்திப்போமாக!

जयतु जयतु नित्यं चन्द्रमौलिर्महेशो
जयतु जयतु नित्यं शारदाभीष्टदात्री ।
जयतु जयतु नित्यं शंकरो देशिकेन्द्रो
जयतु जयतु नित्यं चन्द्रचूडो गुरुर्नः ॥

॥ शुभमस्तु ॥

Koviloor Digital Library

கோவிலூர் ஆதீனம்
1100
21:332
கோவிலூர்-630 307

Koviloor Digital Library

STOTRAS.

॥ स्तोत्राणि ॥

श्रीमच्छंकरभगवत्पूज्यपादैः विरचितानि
श्रीगणपति, सुब्रह्मण्य, ईश्वर, देवीस्तोत्राणि आहृत्य त्रिंशत् ३०
स्तोत्राणि । मू. रू. ३

स्तोत्राणि STOTRAS composed by His Holiness Sri Chandrasekhara Bharati Swamigal, the present Jagadguru of Sringeri. 0 8

630 307

भक्तिसुधातरङ्गिणी BHAKTISUDHATARANGINI or The Works of Sri Sachchidananda Sivabhinava Nrisimha Bharati Swami, the late Mahaswamigal of Sringeri. With several half tone illustrations. Edition De Luxe 10 0

Do. Ordinary Edition 2 8

सदाशिवेन्द्रस्तुतिः Sadasivendrastuti by Do. 0 2½

लघुस्तोत्राणि Miscellaneous Stotras Pt. I Do. 0 2½

" Pt. II 0 2½

शारदास्तोत्राणि Sarada Stotras. 0 2½

For Copies Apply to:—

Sri Vani Vilas Press,

SRIRANGAM.

Koviloor Digital Library

Sri Vani Vilas
Press
Srirangam

கோவிலூர் மடாலயம்